ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் 2009–10 – திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி 1) துறை**

**அரசாணை (நிலை) எண் : 64** **நாள் :16.7.2009.**

படிக்கப்பட்டவை:

(1) அரசாணை (நிலை) எண்.97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 6.6.2008.

(2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் நேர்முகக் கடிதம் எண்.13072/2009/PR 2, நாள் 30.06.2009.

(3) அரசாணை (நிலை) எண்.57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 10.7.2009.

------

**ஆணை :**

படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் 2008–09–ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள நேர்முகக் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் 29.6.2009–ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றிக்கிடையே "2009–10–ஆம் நிதியாண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் உள்ள சுமார் 5,000 பள்ளிகளிலும், பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள சுமார் 500 ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும் கட்டடம் சீரமைக்கும் பணிகள் 85 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளதாக கூறியுள்ளார். ஊராட்சி ஒன்றியப் பள்ளிசீரமைப்பு திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து பின்வருமாறு (32:8 என்ற விகிதத்தில்) நிதி ஒதுக்கீடு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு | : | ரூ. 68 கோடி |
| மாவட்ட ஊராட்சிகளின் பங்கு | : | ரூ. 17 கோடி |
| மொத்தம் | | ரூ.85 கோடி |

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டம் 2009–10–ஆண்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகளையும் அனுப்பி அரசின் அனுமதி கோரியுள்ளார். மேலும், 2009-10-ஆம் ஆண்டிற்கு ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்பு திட்டத்திற்கான நிதியாக ரூ.85 கோடியை மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து பிடித்தம் செய்யவும் மேலும் அதை 10 மாதத் தவணைகளாக வழங்குவதற்கு அனுமதிக்குமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கோரியுள்ளார்.

3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து ஏற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) 2009–10 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ii) ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டத்திற்கான ரூ.85 கோடி நிதியை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் மாநில நிதி ஆணைய நிதிப் பங்கீட்டில் பிடித்தம் செய்து கொள்ளவும், ஏப்ரல் 2009 முதல் ஜனவரி 2010 வரை 10 தவணைகளாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், ஊராட்சி ஒன்றிய பள்ளி சீரமைப்புத் திட்டத்திற்கான மாதாந்திர ஒதுக்கீடு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பங்கீலிருந்து கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு | : | ரூ.6.80 கோடி |
| மாவட்ட ஊராட்சியின் பங்கு | : | ரூ.1.70 கோடி |

(iii) அரசாணை (நிலை) எண். 57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 10.7.2009ல் அனுமதிக்கப்பட்ட மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டினை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் மாதாந்திர நிதி ஆணைய மான்யத்திலிருந்து பிடித்தம் செய்து மாவட்டங்களுக்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு விடுவிப்பு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 1848/FS/P/09, நாள் 12–7–09–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>அரசாணை (நிலை) எண்.64, ஊ.வ.(ம)ஊ.(மா.அ.தி1) துறை, நாள் 16.7.2009.</u>

<u>**இணைப்பு**</u>

**ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் 2009–10க்கான வழிகாட்டி நெறிமுறைகள்.**

**1. பள்ளிகளை தேர்வு செய்தல்:**

2009-10ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பழுது பார்த்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் 2009-10ம் ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**2. பழுது பார்த்தல் மற்றும் மேம்பாட்டுப் பணி வகைகள்:**

கீழ்க்கண்ட இரண்டு வகையான பழுது பார்த்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**i) சிறு பணிகள்:**

- ❖ கட்டிடங்களுக்கு வெள்ளை மற்றும் வண்ணம் பூசுதல் (3 ஆண்டுகளுக்குள் வெள்ளையடிக்கப்பட்ட/வண்ணம் பூசப்பட்ட பள்ளிகள் நீங்கலாக)
- ❖ கான்கீரிட் கூரைகள் பழுது நீக்கம் செய்தல் ( தட்டோடு பதித்தல் அல்லது தண்ணீர் கசியாமல் தடுத்தல்)
- ❖ சேதமடைந்த தரைத் தளத்தினை சீர் செய்தல் / முழுமையாக மாற்றியமைத்தல் கசியாமல் தடுத்தல்).
- ❖ கரும்பலகைக்கு வண்ணம் பூசுதல்.
- ❖ கதவுகள், சன்னல்கள் பழுது நீக்கம் / முழுமையாக மாற்றியமைத்தல்.
- ❖ ஓட்டுக் கூரைக் கட்டடங்களில் சேதமடைந்த ஓடுகள் / ரீப்பர்கள் / மரச் சட்டங்களில் ஏற்பட்ட சிறு பழுதுகளை சீர் செய்தல்.
- ❖ கட்டட சுவர்களில் உள்ள விரிசல்களை சீர் செய்தல்.

குறிப்பு: இத்திட்டத்தின் கீழ் கட்டிடங்களில் வயரிங் செய்தல், மின் விசிறி வசதி செய்தல் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் போன்ற பணிகள் <u>மேற்கொள்ளப்படக் கூடாது.</u>

**ii) பெரும்பணிகள் :**

- ❖ ஏற்கனவே உள்ள மிகவும் சேதமடைந்த ஓட்டுக் கூரைக் கட்டடங்களை முழுமையாக மாற்றி அமைத்தல்.
- ❖ ஆஸ்பெஸ்டாஸ் கூரைகளை முற்றிலுமாக அகற்றி ஓட்டுக் கூரைகளாக மாற்றியமைத்தல்.

**குறிப்பு :** பெரும் பணிகளைப் பொறுத்தவரை சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) ஒவ்வொரு பணியினையும் பார்வையிட்டு கட்டடத்தின் நிலையினை கணக்கில் கொண்டு என்ன வகையான பணி மேற்கொள்ள வேண்டும் எனவும், அதற்கு ஆகும் செலவினம் குறித்தும் ஆய்வு செய்திட வேண்டும்.

**iii) பள்ளிக் கழிப்பறைகள்:**

பள்ளிக் கழிப்பறைகள் கிராம ஊராட்சிகளில், முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ், எடுத்துக்கொள்ளப்படுகிறது. எனவே, கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் இத்திட்டத்தின் கீழ் கழிப்பறைகள் கட்ட எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ், பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் கழிப்பறைகள் கட்ட வழிவகையில்லாததால், பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், ஒவ்வொரு பள்ளியிலும் ரூ50,000/ மதிப்பீட்டில் கழிப்பறை அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்படலாம்.

**3. பணிகள் தேர்வு செய்தல் மற்றும் இறுதி செய்தல்:**

**அ)** கீழ்க்கண்ட நபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தேர்வுக் குழு 2009-10ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் உள்ள ஒவ்வொரு பள்ளிக் கட்டிடத்தினையும் பார்வையிட்டு தேவையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பழுது மற்றும் மேம்பாட்டு விபரங்களை ஆய்வு செய்து பட்டியலிட வேண்டும். தேர்வுக் குழு பின்வரும் நபர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாக இருக்கும்.

அ. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) – குழு அமைப்பாளர்.
ஆ. ஒன்றியப் பொறியாளர்.
இ. உதவி தொடக்கக் கல்வி அலுவலர்.
ஈ. ஊராட்சி ஒன்றிய பள்ளித் தலைமையாசிரியர்.
உ. கிராம ஊராட்சி மன்றத் தலைவர்.
ஊ. தொடர்புடைய ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்.

- பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் அமைந்துள்ள பள்ளிகளை தேர்வு செய்யும் குழு அ, ஆ, இ மற்றும் ஈ-ல் கண்டுள்ள உறுப்பினர்களை மட்டும் கொண்டுள்ளதாக இருக்கும்.

**ஆ)** ஒரு குறிப்பிட்ட பள்ளிக் கட்டடம் மிகவும் பழுதடைந்து முற்றிலும் மாற்றப்பட வேண்டிய நிலையில் உள்ளதாக தேர்வு குழு முடிவு செய்யுமாயின், அப்பள்ளிக் கட்டிடத்தினை இத்திட்டத்தின் கீழ் பழுது பார்த்திட எடுத்துக் கொள்ளக்கூடாது. அதற்குப் பதிலாக சர்வ சிக்ஷா அபியான், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது இதர திட்டங்களில் புதிய கட்டிடங்களை கட்ட பரிசீலிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் புதிய கட்டிடங்கள் கட்டக் கூடாது.

**4. முன் மொழிவு செய்யப்படும் பணிகளை மேலாய்வு செய்தல்:**

இவ்வாண்டு முதல், சரியான மற்றும் துல்லியமான மதிப்பீடுகள் தயார் செய்யப்படும் பொருட்டு, ஆண்டு துவக்கத்திலேயே மதிப்பீடுகள் தயார் செய்யப்படும் முன்பே, மேலாய்வுகளுடன் இணைந்த தல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 2009-10ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராம ஊராட்சிகளில் மட்டுமே இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதால், இவ்வூராட்சிகளில் முழு வீச்சிலான மேலாய்வு செய்வதில் சிரமம் ஏதும் இருக்கக் கூடாது.

மேலாய்வு மேற்கொள்ளப்படும் போது கீழ்க்கண்ட விபரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

i. அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பழுது பார்ப்புப் பணிகள் ஏதும் தவறுதலாக விடுபடாமலிருத்தல்.

ii. தேவையற்ற இனங்கள் தவறுதலாக சேர்க்கப்படாமல் இருத்தல்.

iii. விரிவான மதிப்பீடு தயார் செய்தல்.

iv. பழுது பார்த்தலுக்கான மதிப்பீடுகள் அதிகமாக இருக்கும் பட்சத்தில், சர்வசிக்ஷா அபியான் திட்டத்திலோ மற்ற வேறு திட்டங்களிலோ புதிய கட்டிடம் கட்டுதல் சரியாக இருக்குமா என ஆய்வு செய்தல்.

v. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்படாத பணிகள் சேர்க்கப்படாததை உறுதி செய்ய வேண்டும். (உம்.) கட்டிடங்களுக்கு மின் வசதி செய்தல்.

கீழ்க்கண்ட அலுவலர்கள் பள்ளிக் கட்டிடங்களை பின்வருமாறு மேலாய்வு செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | 10% |
| 2. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | 20% |
| 3. | செயற்பொறியாளர் (ஊ.வ.) | 20% |
| 4. | முதன்மைக் கல்வி அலுவலர் | 20% |
| 5. | மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் | 20% |

100% பள்ளிகளையும் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்கள் குறிப்பாக உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) அளவில் மேலாய்வு செய்யப்பட வேண்டும்.

**5. நிர்வாக அனுமதி:**

இப்பணிகளுக்கான நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு கருத்துருவிலும் கீழ்க்கண்ட விபரங்கள் இடம் பெற்றிருப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1. பத்தி–3ல் குறிப்பிட்டுள்ள தேர்வுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆய்வுப் படிவத்தில் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு பணிக்கும் விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தேச மதிப்பீட்டின் அடிப்படையில் கருத்துரு அனுப்பக் கூடாது.

3. பள்ளிக் கட்டிடங்களில் உள்ள பல்வேறு பழுதுகளையும் வெளித் தோற்றத்தையும் தனித்தனியாக புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். (அனைத்துப் புகைப்படங்களும் மதிப்பீட்டுடன் இணைக்கப்பட வேண்டும்)

**குறிப்பு:** ஒரு பள்ளியில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டடங்களில் பழுது பார்க்க வேண்டியிருப்பினும் நிர்வாக அனுமதிக்காக கருத்துரு அனுப்பும் போது, ஒரு அலகாகவே கணக்கில் கொள்ள வேண்டும்.

நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு பள்ளிக் கட்டிடமும் மேலாய்வு செய்யப்பட்டுள்ளதா என மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி செய்ய வேண்டும்.

**6. பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோருதல்:**

ஒப்பந்தப் புள்ளி அடிப்படையிலேயே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு பள்ளியிலுள்ள பழுது நீக்கப்பணிகள் அனைத்தும் ஒப்பந்தப் புள்ளிக்காக ஒரே வேலையாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அரசாணை நிலை எண் 203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 20.12.2007–ல் தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல், பணிகள் வகை மற்றும் நிலை) விதிகள் 2007–ல், அறிவிக்கை–2ல் உள்ள பட்டியல்–1ல் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி ஒப்பந்தப் புள்ளிகளுக்கான நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.

**7. நிதிப் பகிர்வு:**

மாவட்டங்களில் எடுத்துக் கொள்ளப்படும் ஊராட்சி ஒன்றிய மற்றும் ஆரம்ப பள்ளிக் கட்டிடங்களுக்கேற்ப, மதிப்பீடுகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மாவட்ட அளவில், ஊரக வளர்ச்சி முகமையில், இத்திட்டத்திற்கான நிதி தனிக் கணக்கில் பராமரிக்க வேண்டும். வட்டார அளவில், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)

வட்டார அலுவலகத்தில் தனிக் கணக்கு வைத்திருக்க வேண்டும். வட்டார ஊராட்சிகளிலிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் வட்டார ஊராட்சிகளுக்கு மறு ஒதுக்கீடு செய்த பின்னர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், சம்பந்தப்பட்ட வட்டார ஊராட்சிகளுக்கு நிதியினை விடுவிப்பார்.

**8. ஆவணப்படுத்துதல்:**

பணிகளை தொடங்குவது முதல் பணிகள் முடியும் வரை உள்ள அனைத்து நிலைகளிலும் ஆவணப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். பணிகள் முடிந்த பின்னர், பள்ளியின் ஒரு கட்டிடத்தில் சம்மந்தப்பட்ட பள்ளி “ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்” (PANCHAYAT UNION SCHOOL RENOVATION PROGRAMME)-ன் கீழ் புதுபிக்கப்பட்டது என்ற விபரத்தை செலவின விபரத்துடன் தமிழில் தெளிவாக எழுதிட வேண்டும்.

**9**. இத்திட்டத்தில் உள்ள எந்த ஒரு வழிமுறையினையும் கால நிலைக்கேற்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரை கலந்தாலோசித்து மாற்றியமைக்க முதன்மை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்திற்கு கூடுதல் நிதி கோரப்படமாட்டாது என்பதுடன் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விகிதாச்சாரம் மாற்றப்படமாட்டாது எனும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்படும்.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.